

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (23.9.2024) முகாம் அலுவலகத்தில், டிவிஎஸ் நிறுவனத்தின் தலைவர் வேணு சீனிவாசன் அவர்கள் சந்தித்து, அமெரிக்க நாட்டிற்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டு தமிழ்நாட்டிற்கு அதிக அளவிலான முதலீடுகளை ஈர்த்தமைக்காக வாழ்த்துத் தெரிவித்தார். உடன் அவரது மனைவி திருமதி மல்லிகா சீனிவாசன் உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.9.2024) தலைமைச் செயலகத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 4 கோடியே 66 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு உணவுப்பொருள் சோதனைக் கூடம், திண்டுக்கல், திருச்சி மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் 17 கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 4 சேமிப்புக் கிடங்கு வளாகங்கள், 36 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 58 நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டடங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் ஆ.அண்ணாதுரை, உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை இயக்குநர் த.மோகன், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இணைச் செயலாளர் அமர் குஷ்வாஹா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் – கூட்டுறவுத்துறை சார்பில்

# ரூ.73.71 கோடியில் புதிய கட்டடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, செப். 24–

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.9.2024) தலைமைச் செயலகத்தில், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 4 கோடியே 66 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு உணவுப்பொருள் சோதனைக் கூடம், திண்டுக்கல், திருச்சி மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் 17 கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 4 சேமிப்புக் கிடங்கு வளாகங்கள், 36 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 58 நேரடி நெல் கொள்முதல் நிலைய கட்டடங்கள், கூட்டுறவுத் துறை சார்பில் 15 கோடியே 22 இலட்சம் ரூபாய் செலவில் சாலிகிராமம் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம், பூங்கா நகர் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை மற்றும் திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவு சங்கம் ஆகியவற்றில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்களை திறந்து வைத்தார். மேலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிக்காலத்தில் இயற்கை எய்திய 32 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளையும்,

78 பருவகால பணியாளர்களுக்கு பணி நிரந்தர ஆணைகளையும் வழங்கிடும் அடையாளமாக 3 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

விவசாயிகளின் கடின உழைப்பில் உற்பத்தியான நெல்மணிகளை அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு, அவற்றினை இயற்கைப் பேரிடர் மற்றும் மழைப் பொழிவுகளிலிருந்து பாதுகாப்பாக சேமித்து வைத்திடவும், அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையிலும், பொது விநியோகத் திட்டத்திற்கான உணவு தானியங்களைச் சேமித்து வைத்திடும் கிடங்குகளின் கொள்ளளவினை உயர்த்தும் வகையிலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக அதிக அளவில் சேமிப்புக் கிடங்குகள் கட்டப்பட்டு வருகின்றன.

**தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் கலைஞர் நூற்றாண்டு உணவுப்பொருள் சோதனைக் கூடம், 4 சேமிப்பு கிடங்கு வளாகங்கள் மற்றும் 58 நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டடங்களை திறந்து வைத்தல்**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் வட்டம், கருமத்தம்பட்டியில் பொது விநியோகத் திட்ட பொருட்கள் தரமானதாக இருப்பதை உறுதி செய்திட 4 கோடியே 66 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு உணவுப்பொருள் சோதனைக் கூடம்;

திண்டுக்கல், திருச்சி மற்றும் வேலூர் மாவட்டங்களில் 17 கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள நான்கு சேமிப்பு கிடங்கு வளாகங்கள்;

தென்காசி, திண்டுக்கல், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களில் தலா 62 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் மொத்தம் 36 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 58 நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டடங்கள்;

**என மொத்தம் 57 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.**

**கூட்டுறவுத் துறை சார்பில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்களை திறந்து வைத்தல்**

**சாலிகிராமம் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம்**

சென்னை, சாலிகிராமத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்திற்குச் சொந்தமான காலிமனையில் 29,195 சதுரஅடி பரப்பளவில் 7 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள இணையத்திற் கான புதிய அலுவலகக் கட்டடம்;

**பூங்காநகர் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை**

2022-2023ஆம் ஆண்டிற்கான கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையில் அறிவித்தபடி, சென்னை அண்ணா நகரில், பூங்கா நகர் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைக்கு சொந்தமான 15வது பிரதான சாலையிலுள்ள இடத்தில், 4800 சதுர அடி நிலத்தில், 9801 சதுர அடி கட்டடப் பரப்பளவில் 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அலுவலகம், சுய சேவைப் பிரிவு, பண்ணைப் பசுமை நுகர்வோர் கடை மற்றும் மருந்தகம் ஆகியவற்றுடன் கூடிய வணிக வளாகம்;

**திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவு சங்கம்**

2022-2023ஆம் ஆண்டிற்கான கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையில் அறிவித்தபடி, கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து 3 கோடியே 22 இலட்சம் ரூபாய் செலவில் சென்னை, திருவல்லிக்.கேணி நகரக் கூட்டுறவு சங்கத்திற்கு சொந்தமான மயிலாப்பூரில் உள்ள இடத்தில் தரைதளத்தில் தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி கிளைக்கான கட்டடம், முதல் தளத்தில் திருமண மண்டபம் / கூட்ட அரங்கம் மற்றும் திருவல்லிக்கேணி மாதவபுரத்தில், சங்கத்திற்கு சொந்தமான இடத்தில் தரைதளத்தில் சென்னை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி கிளைக்கான கட்டடம் மற்றும் முதல் தளத்தில் திருமண மண்டபம் / கூட்ட அரங்கம்;

**என மொத்தம் 15 கோடியே 22 இலட்சம் ரூபாய் செலவில் கூட்டுறவுத் துறை சார்பில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

**தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் 110 நபர்களுக்கு பணி நியமனம் மற்றும் பணி நிரந்தர ஆணைகள் வழங்குதல்**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணிக்காலத்தில் இயற்கை எய்திய 32 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளையும், 78 பருவகால பணியாளர்களுக்கு பணி நிரந்தர ஆணைகளையும், என மொத்தம் 110 நபர்களுக்கு ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக முதலமைச்சர் அவர்கள் 3 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் டாக்டர் நா. சுப்பையன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் ஆ.அண்ணாதுரை, உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை இயக்குநர் த. மோகன், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இணைச் செயலாளர் அமர் குஷ்வாஹா, கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர் திருமதி ப.காயத்ரி கிருஷ்ணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.9.2024) தலைமைச் செயலகத்தில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக உதவி வனப்பாதுகாவலர் பணியிடத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட 9 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் விஜயந்திர சிங் மாலிக், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (ஆராய்ச்சி) செல்வி மீதா பானர்ஜி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.9.2024) தலைமைச் செயலகத்தில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் உதவிப் பொறியாளர் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 48 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 5 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய உறுப்பினர் செயலர் ஆர்.கண்ணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாட்டில் உடல் உறுப்பு தானம் அதிகரிப்பு!

சென்னை, செப். 24–

மூளைச்சாவு அடைந்து உடல் உறுப்பு தானம் செய்பவர்களுக்கு அரசு மரியாதை வழங்கப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்த ஓராண்டில் இதுவரை 270 பேர் தங்களது உடல் உறுப்புகளைத் தானமாக வழங்கியுள்ளனர். கடந்த ஆண்டு செப்டம்பர் 23ம் தேதி, முதலமைச்சர் இந்த அறிவிப்பை வெளியிட்ட பின், ஆந்திரா, ஒடிசா உள்ளிட்ட மாநிலங்களும் இதனைப் பின்பற்றி வருகின்றன.

### தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்தில்

# 48 பொறியாளர்களுக்கு பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, செப். 24–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (23.9.2024) தலைமைச் செயலகத்தில், சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை சார்பில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக உதவி வனப்பாதுகாவலர் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 9 நபர்களுக்கும், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் உதவிப் பொறியாளர் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 48 நபர்களில், 5 நபர்களுக்கும் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாட்டிலுள்ள வனம் மற்றும் வன உயிரின வளத்தை சமுதாய பங்களிப்பு, புதுமையான முயற்சிகள், மக்கள் ஒத்துழைப்பு மற்றும் அறிவியல் சார்ந்த முறையில் பாதுகாப்பதும், வளமான மற்றும் மீள்தன்மை உடைய வனங்களை உருவாக்குவதே தமிழ்நாடு அரசின் தொலைநோக்கு திட்டமாகும். வன வளம் மற்றும் வன உயிரின வளங்களை நன்முறையில் மேலாண்மை செய்திட வனத்துறையிலுள்ள பணியாளர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகள் மற்றும் தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த வனத்துறையின் பணிகளில் தொய்வு ஏற்படாவண்ணம் காலிப்பணியிடங்கள் தமிழ்நாடு அரசால் உடனுக்குடன் நிரப்பப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள் வரை வனத்துறையில் உதவி வனப் பாதுகாவலர், வனத்தொழில் பழகுநர், உதவியாளர், இளநிலை உதவியாளர், சுருக்கெழுத்து தட்டச்சர் போன்ற பணியிடங்களுக்கு 154 நபர்களும், கருணை அடிப்படையில் 164 நபர்களும், என மொத்தம் 318 நபர்கள் பணிநியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், 308 வேட்டைத் தடுப்புக் காவலர்கள் பணியிலிருந்து வனக்காவலர்களாக பணியமர்த்தப் பட்டுள்ளனர்.

**உதவி வனப்பாதுகாவலர் பணியிடத்திற்கான பணிநியமன ஆணைகள் வழங்குதல்**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக உதவி வனப்பாதுகாவலர் பணியிடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 9 நபர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

உதவி வனப் பாதுகாவலர்கள் வனப் பாதுகாப்பு மற்றும் வன உயிரினப் பாதுகாப்பு, வனப் பாதுகாப்பு சட்ட செயலாக்கம், வன நிர்ணயப் பணிகள், தீ தடுப்புப் பணிகள், கிராம வனக் குழுக்களின் செயல்பாடுகளை கண்காணித்தல், வன நிர்வாக பணிகளில் மாவட்ட வன அலுவலர் / வனப் பாதுகாவலர் / தலைமை வனப் பாதுகாவலர் உள்ளிட்ட அலுவலர்களுக்கு உதவியாக இருப்பார்கள்.

**தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தில் உதவி பொறியாளர் பணியிடத்திற்கான பணி நியமன ஆணைகள் வழங்குதல்**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள் வரை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தில் உதவி பொறியாளர், சுற்றுச்சூழல் விஞ்ஞானி, கள உதவியாளர், அலுவலக உதவியாளர் போன்ற பணியிடங்களுக்கு மொத்தம் 167 நபர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தில் உதவி பொறியாளர் பணியிடத்திற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக தெரிவு செய்யப்பட்ட 48 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று 5 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

உதவி பொறியாளர்கள், காற்று மற்றும் நீர் மாசு தடுப்பு சட்டங்களின் கீழ் தங்களின் உட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள தொழிற்சாலைகளால் வரம்புக்கு இசைவாணைக்காக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களை பரிசீலித்து, அத்தொழிற்சாலைகளில் தளஆய்வு மேற்கொண்டு உரிய இசைவாணை கட்டணம் மற்றும் பரிந்துரைகளுடன் ஆய்வறிக்கையினை மேல்நடவடிக்கைக்காக சமர்ப்பித்தல், புதிய தொழிற்சாலைகள் மற்றும் மாசு கட்டுப்பாடு வாரிய இசைவாணையின்றி இயங்கும் தொழிற்சாலைகளை கண்டறிந்து வாரிய இசைவாணை பெற நடவடிக்கை மேற்கொள்ளுதல், தொழிற்சாலைகளின் கழிவுநீர் மாதிரிகள் சேகரித்து ஆய்வகங்களுக்கு பகுப்பாய்வுக்கு அனுப்புதல், மாவட்ட மற்றும் மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களுடன் இணைந்து காற்று மாதிரி ஆய்வு மேற்கொள்ளுதல் போன்ற பல்வேறு பணிகளை மேற்கொள்வார்கள்.

இந்நிகழ்ச்சியில், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் விஜயந்திர சிங் மாலிக், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (ஆராய்ச்சி) செல்வி மீதா பானர்ஜி, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய உறுப்பினர் செயலர் ஆர். கண்ணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே! இலங்கை ஜனாதிபதி தேர்தலில் ஜனதா விமுக்தி பெரமுனா கட்சியின் தலைவர் அனுர குமார திஸாநாயக்க வெற்றி பெற்றிருக்கிறாரே ?

**பெரியதம்பி :** **ஆமாம் தம்பி; இலங்கையில் இதுவரை இல்லாத திருப்பமாக, இடதுசாரி ஒருவர் முதல் முறையாக ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்பது மகிழ்ச்சியுடன் போற்றி வரவேற்கக் கூடியதே.**

**“மாற்றம் ஒன்றே தீர்வு” என்ற முழக்கத்தையும் முன்வைத்து இவர் வெற்றி பெற்றுள்ளார் என்று பரவலாக அறியப்படுகிறது.**

**இலங்கைக் கடல் படையினரால் நமது மீனவர்கள் தொடர்ந்து அனுபவித்துவரும் கொடுமைகளுக்கும்; இதுவரை நிறைவேறாமல் இருக்கும், இலங்கைத் தமிழர்களின் நியாயமான உரிமைக் கோரிக்கைகளுக்கும்; உரிய தீர்வு காண்பதே ‘பெரிய மாற்றம்’ ஆக இருக்கும் என்று உலகத் தமிழர்கள் ஆவலுடன் எதிர்பார்ப்பார்கள்.**

**அனைவரும் நம்பிக்கையுடன் காத்திருக்கலாம்.**

**இடதுசாரியான திஸா நாயக்க, ஜனாதிபதி ஆன உடன், ‘சிங்கள சாரி’யாக சிந்தனை மாற்றத்திற்கு ஆளாகாமல் இருப்பார் என்று உறுதியாக நம்புவோமாக !**